## கவிஞர் செல்லையா நாகேந்திரன்



தமிழுக்கு வேறு மொழி சமமாகுமா – அதை
அமிழ்தென்று சொன்னால் பொய்யாகுமா!

பரமனை மகிழ்வித்த மொழியல்லவா – அதைப்
பேசுதல் வாழ்வுக்கு வரமல்லவா – சப்த
சுரங்களைத் தந்த நாதமல்லவா – தமிழ்
சங்கீத இசையின் சொர்க்கமல்லவா!

கவிஞர் செ.நாகேந்திரன்

# மலர்ந்ததும் உதிர்ந்ததும்

**2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கவிஞர் திரு செல்லையா நாகேந்திரன் அவர்கள்



தாயின் மடியில்
04.06.1946



இறைவன் அடியில்
05.06.2004

## திதி வெண்பா

ஆண்டு தாரண அமைந்த வைகாசி
பூண்ட அபரபக்கச் சதுர்த்தியில் - மாண்பு
செல்லையா மைந்தன் சீரகவிஞன் நாகேந்திரன்
தொல்லுலகு நீத்தான் காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் வணக்கம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாம்தாம் ஆரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் செந்தீ
எந்தையார் திரு நாமம் நமச்சி வாய
என்றெழுவார் இருவிசும்பில் இருக்கலாமே.

## திருவாசகம்

சிந்தனை நின் றனக்காக்கி நாயினன்றன்
கண்ணினை நின்றிருப்பாதம் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணி வார்த்தைக் காக்குமைம் புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்ததனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலியத் தமியனேற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே !

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்கமலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்ககுறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்கநற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதிவிளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரன்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன்அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்! விளங்குஒளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்;
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய் இயமான னாம்விமாலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி,
மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந் தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கும் மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே
மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆராஅமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆரயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா!மிக் காய்!நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே!என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே!ஓ வென்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
Saiva Munnetta Sangam (UK)
"Community Service through Hindu Concern"
2 Salisbury Road Manor Park London E12 6AB
Tel: 020 8514 4752/020 8550 2739 Fax: 01268 561865
Bankers Lloyds TSB Bank Plc. & National Savings Bank
Auditors AJ Accountants

Registered Charity No: 292085

27th Year Management Committee

*President & Trustee*
Mr. T. Kanagasabai
020 8550 3654

*Vice President & Trustee*
Mr. S. R. Pasupathy
020 8925 9611

*General Secretary & Trustee*
Mr. S. Anandathiyagar
020 8924 8402

*Treasurer & Trustee*
Mr. O. Omneegaran
020 8530 2450

*Trustees*
Dr. V. Balasegaram
Mr. W. Nagendram
Mr. V. R. Ramanathan
Mr. V. Sellathurai
Mr. C. Sithamparampillai

*School Secretary*
Mrs. P. Uthayakumar

*Religious Secretary*
Mr. Saravanan Anandathiyagar

*Social Service Secretary*
Mr. V. C. Visuvanathan

*Publication Secretary*
Mr. S. Thamboo

*Building Project Secretary*
Mr. G. Parameswaran

*Membership Secretary*
Miss K. Subramaniam

*Assistant Treasurers*
Mr. V. R. Loganathan
Mr. T. Rabindramohan

*Committee Members*
Mr. Siva Asokan
Mr. S. Arputhanathan
Mrs. V. Kanagenthiran
Mr. M. Nataraathevalan
Dr. N. Navaratharaja
Mr. R. Pathmanathan
Mr K. Sivagnanasambapillai
Miss S. Sivarajasingam

23.06.2004

## நால்வர் தமிழ்க் கலை நிலையம்

### புகழ் விரும்பாப் புலவனுக்குப் புகழாரம்!

கவிஞர் நாகேந்திரன் அவர்களின் புகழைக் கொண்டாடும் தமிழ் உலகே வணக்கம். வாழ்க்கையில் புகழை விரும்பாதவர் கவிஞர் நாகேந்திரன். அவர் விரும்பாததைச் செய்து எமது நன்றியைத் தெரிவிக்க நாம் முயலுகின்றோம். கவிஞருக்கு அஞ்சலி செலுத்தவும் நன்றி சொல்லவும் இப்போதைக்கு வேறு வழி தெரியவில்லையே.

நயநட்டம் எதிலும் பார்க்காது என்றென்றும் இயற்கையுடன் சேர்ந்து வாழும் குருவி நான் - என்று அவர் பாடியமைக்கமைய எமது பாடசாலையில் எவ்வித அறிமுகத்தையும் விரும்பாமல் அமைதியாகத் தொண்டாற்றிய நல்ல உள்ளத்தவர். மாற்றி உலகத்தில் பிழைப்பு நடத்தாது தாமாக அனைத்தும் நமக்காக ஆற்றி சீமானாக வாழ எண்ணாது இப்புவியில் சாமானிய வாழ்வில் இன்புறும் குருவி நான் - என்று தன்னுடைய கொள்கையைப் பறைசாற்றியவர். தான் எழுதியவாறே சாதாரண வாழ்வை விரும்பி வாழ்ந்த செம்மையாளர்.

தமிழ் மேல் கொண்டபற்றால் மாணவ சமுதாயத்துக்குப் பணிசெய்ய முன்வந்து எங்களுக்குப் பலம் சேர்த்த ஆசிரியரை இழந்துள்ள நாங்கள் தடுமாறிக் கொண்டிருப்பதை அவர் உணர்வார். எமது பாடசாலையில் நாம் மீண்டும் 20.06.2004 ஞாயிற்றுக் கிழமை அன்று ஒன்று கூடியபோது அவர் இல்லாததால் நாம் பட்ட துன்பத்தை நாகேந்திரன் மாஸ்டர் மேல் உலகத்திலிருந்து அவதானித்திருப்பார். நாம் எமது கடமையைத் தொடர்ந்து செய்வோம் என்றும் மாணவர்கள் தமிழ் மொழியை மேலும் ஆவலுடன் கற்பேம் என்றும் இதுவே நாம் உங்களுக்குச் செய்யும் அஞ்சலியாகும் என உறுதி செய்து கொண்டோம்.

நால்வரின் பெயரால் தமிழ்ப்பணி புரியும் நால்வர் கலைக்கூடம் நலம்புகழ் பெற்று நானிலம் போற்ற வாழிய வாழியவே - என நீங்கள் வாழ்த்தியமைக்கமைய எங்கள் பணிகளை நாம் செய்து பெயரும் புகழும் ஒரு பொருட்டாகக் கருதாமல் உங்கள் வழியில் நிற்போம். நல்ல எண்ணங்களை விதைத்தும் அவை வளர வழியையும் காட்டினீர்கள். இவைகளுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம். உங்களது ஆத்மா சாந்தியடைந்து உங்களது உயர்ந்த கொள்கைகள் இவ்வுலகில் நிலைக்க வழிகாட்ட வேண்டுமென இறைவனை வணங்குகின்றோம்.

இப்படிக்கு
பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பாக

சதாசிவம் ஆனந்ததியாகர்
தலைமை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களுக்குள் புதுமையானவர் கவிஞர் நாகேந்திரன்

மனிதர்களுக்குள் இவர் ஒரு புதுமையானவர்..
பழகுவதற்குப் பண்பானவர் பேச்சில் அடக்கம் இருக்கும். செய்கையில் நிதானம் இருக்கும். செயலில் கடமை உணர்வு இருக்கும். கடமையில் செயல்திறன் இருக்கும்.

இந்த மனிதர் கண்ணியத்துக்கு இருப்பிடமானவர் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டவர். .

இவர் ஒருவருக்கு நண்பனாகிவிட்டால் அர்ச்சுனனுக்கு கண்ணன் கிடைத்தது போலவே இருக்கும்.

பொதுவில் நண்பர்களுக்க நண்பன். அன்பர்களுக்கு அன்பன்.

இவரது இடது கைக்கும் வலது கைக்கும் போராட்டம் இருக்கும். காரணம் - ஒரு கை கொடுத்தால் மற்றக் கைக்குத் தெரியக்கூடாது என்பதில்தான்.

இவரது உதவும் கரங்களுக்கும் உடுக்கை இழந்தவன் கரங்களுக்கும் வேற்றுமை கிடையாது.

கவிஞர் நாகேந்திரன ஒரு நடமாடும் தனி மனித சமூக சேவா நிறுவனம்.

புலம்பெயர்ந்து வந்தவர்கள் பலர் இவரால் உயர்ந்தவர்கள். அனேகர் வாழ்கைக்கான வெளிச்சத்தைக் கண்டவர்கள். தான் தூங்காமல் மறறவர்களை நிமம்தியாக வாழவைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ! பிடிச்சு பிளேனிலை ஏத்தப்போறாங்களாம் என்றோ அல்லது ஹோம் ஒபீஸிக்கு வரச் சொல்லிக கடிதம் வந்திட்டுது அல்லது போகச் சொல்லிப் போட்டான் என்று கதறிக்கொண்டு இவரது வீட்டிற்கு வரும் அனேகரை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

இப்படியானவர்களின் பரிதாப நிலையைப் பார்த்ததும் இவர் துடித்துப்போவார். அனுதாபத்துடன் மட்டும் இவர் நின்றுவிடமாட்டார். ஐயர்தான் இதற்குச் சரி அதற்கு முன்னர் சிவசுப்பிரமணியத்திடம் என்ன செய்யலாமென்று கேட்பம்பயப்படாதையுங்கோ பற்றெசன்வரை போகலாம் என்று வந்தவரகளுக்கு ஆறுதல் கூறிவிட்டு வழமையான கைப்பையையும் தூக்கிக்கொண்டு புறப்பட்டுவிடுவார். ஒரு முடிவு காணும் வரையில் ஏறாத படிகள் மட்டுமல்ல முன்பின் தெரியாதவர்களிடமும் போய் ஒரு முடிவோடு வீடு திரும்புவது இவரது பழக்கம்.

இப்படி எல்லாம் சேவை செய்வதைப்பற்றி மற்றவர்களிடம் சொல்லிப் பெருமைப்பட்டதை நான் கேட்டதுமில்லைக் கேள்விப்பட்டதுமில்லை. மற்றவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதை வெளியில் சொல்லி ஆரவாரம் செய்யாமல் மௌனம் அனுஷ்டித்தது இவரது சேவைக்கு இன்று அணிகலனாகி விட்டது.

என்னால் முடியாது என்ற வார்த்தைகள் மட்டும் இவரத்து வாயிலிருந்து என்றுமே வந்ததில்லை. சைவமுன்னேற்றச் சங்கம் நடத்தும் பாடசாலையில் ஆசிரியர். பாடசாலைகள், ஆலயங்கள் நடத்தும் பேச்சுப் போட்டிகளில் நடுவர், உலக சமாதான கவுன்ஸிலின் அங்குரார்ப்பண அங்கத்தவர், நியூஹாம் தமிழர் ஐக்கிய கழகத்தின் ஊழியர், அனேகமாக இவர் தொடர்பு வைத்திருக்காத நிறுவனங்களே இல்லை எனலாம்.

இவரது ஒரேஒரு பெரிய பொழுதுபோக்கு கவிதைகள் எழுதுவதுதான். அதிலும் வகைவகையான கவிதைகளை எழுதுவதில் கெட்டிக்காரர். ஒரு குறுகிய காலத்துக்குள் ஐந்து கவிதைப் புத்தகங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்ட பெருமைக்குரியவர். ஆனால், அவைகளில் ஒன்றுக்காவது வெளியீட்டு விழா வைக்காதவர். அதுபற்றிக்கேட்ட நண்பர்குளுக்கு அவர் சொன்ன பதில் மற்றவர்களுக்குச் சிரமம் கொடுப்பதிலும் பார்க்க ஒதுங்கியிருப்பது நல்லதெனப்பதே.

நமது சமுதாயம் ஒரு நல்ல சமூக சேவையாளனை இழந்துவிட்டது. தமிழ் ஒரு தமிழ் பற்றாளனை இழநதுவிட்டது. கவிதை ஒரு புனிதமான கவிஞனை இழந்துவிட்டது. தமிழ் கற்போர் ஒரு நல்ல ஆசிரியனை இழந்துவிட்டார்கள். நண்பர்கள் ஒரு தூய்மையான நண்பனை இழந்துவிட்டார்கள்.

இவருடன் நெருங்கிப் பழகிய என் போன்றோருக்கு இவரது மறைவு அது ஒரு நிறைவு செய்ய முடியாத இடைவெளி

கண்ணீர் அஞ்சலிகள்

இந்த அற்புதமான மனிதர்தான் மறைந்த கவிஞர் செல்லையா நாகேந்திரன்.

நண்பர் நாகேந்திரன் நாவற்குளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பபில் திருமணம் செய்தவர். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலண்டனுக்கு வந்த துணைவியார் நோய்வாய்ப்பட்டு சில மாதங்களுக்குள் பிரிவுற்றமை கவிஞர் நாகேந்திரனின் வாழ்க்கையை வெகுவாகப் பாதித்து விட்டது. மனைவியின் பிரிவை நிவர்த்திசெய்வதற்கு இவருக்குக் குழந்தகளும் இல்லாமல் போனது மற்றொரு மன வேதனை.

இப்படியான வேதனைகளை எல்லாம் ஓரங்கட்ட மற்றவர்களுக்குத் தொண்டு செய்வதையும், கவிதை எழுதுவதையும் தனக்குத் துணையாக்கிக் கொண்டார். மிகக்குறுகிய காலத்தில் ஐந்து கவிதை நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர் கவிஞர் நாகேந்திரன். சமீப காலத்தில் வெளிவந்த ஆலய மலர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைகள், பத்திரிகைகள் உட்பட அனேகமான பிரசுரங்களிலும் இவரது கவிதைகள் வெளிவந்துகொண்டிருந்தன.

ஒரு கவிதைப் பத்தகத்துக்காவது வெளியீட்டுவிழா வைக்கலாமென்று நானும், நண்பர் சம்பந்தனும் பலமுறை கேட்டுப்பார்த்தோம். அதற்கு அவர் சம்மதித்ததேயில்லை.

.

இப்படி ஒதுங்கி வாழ்ந்த கவிஞரை மக்கள் முன்னர் கொண்டுவந்த பெருமை

அவரது நெருங்கிய நண்பரான ஐ. தி. சம்பந்தனுக்கே உரியது. அகதிகளின் சோக வரலாற்றுப் புத்தக வெளியீட்டில் முன் அறிவித்தல் எதுவும் இன்றி கவிஞர் நாகேந்திரன் அவர்கள் மேடைக்கு அழைக்கப்படடு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

இரங்கல் பாமாலை புனைவதில் முன்னணியில் திகழ்ந்தவர். இறப்பில் ஒருவரைக் கௌரவிக்கப் பின்னிற்கக் கூடாதென்ற பெரிய மனம் படைத்தவர்.

ஏற்ற பணியை கருமமே கண்ணாக இருந்து நிறைவு செய்யக்கூடிய மனம் படைத்த கவிஞர் நாகேந்திரனின் திடீர் மறைவு இலண்டன்வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது என்று சொல்லலாம். உண்மையிலேயே.உதவிக்கரம் ஒன்றை இழந்துவிட்டார்கள்..

நாகேந்திரன் வைத்தீஸ்வராவின் பழைய மாணவர். இலங்கை நெல் சந்தைப்

படுத்தும் சபையில் முன்னர் கடமையாற்றியவர்.

கவிஞர் நண்பர் நாகேந்திரன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

## பொன் பாலசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கமாகவும், அமைதியாகவும், கவிஞராக வளர்ந்து கவிதைகளால் மக்களுக்குச் சேவையாற்றிய அமரர் கவிஞர் - செ. நாகேந்திரன்

யாழ்ப்பாணம் நாவற்குழியைப் பிறப்பிடமாகக்கொண்ட கவிஞர் செ. நாகேந்திரன் அவர்கள் ஒரு பட்டதாரி. மட்டக்களப்பில் அரசு உத்தியோகத்தராகப் பணியாற்றிய போது அம்மண்ணின் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். வடகிழக்கு இணையடிக்கு அத்திவாரம் இட்ட கவிஞர்.

இலங்கை அரசியல் சூழ்நிலை காரணமாக 1999 ல் இடம் பெயர்ந்து இலண்டன் வந்தார். புலம்பெயர் தமிழர்களில் ஒருவராக வாழ்ந்து வந்தார். தனக்கென சில நண்பர்களைத் தெரிவு செய்தார். அவர்களுடன் நெருக்கமாகப் பழகி வந்தார். அன்றிலிருந்து மிக நெருங்கிய நண்பராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்து வந்தவர் காரைநகரைச் சேர்ந்த திரு. க. ஜெகதீசன் ஆவார். இவர் இலண்டனில் வாழ்ந்து வருகின்றார். அந்த அன்புப்பாசத்தினால் அன்னார் மறைந்த பின் துடியாய்த்துடித்து அவரது இறுதிக்கிரிகைகளைச் சிறப்புடன் செய்ய தன் உறவினர் போல் முன்னின்று உழைத்தவர்.

எனக்கும் திரு. ஜெகதீசன் மூலம் கவிஞர் நாகேந்திரன் அவர்கள் தொடர்பு 1992லிருந்து ஏற்பட்டது. அவருடைய அமைதியான அடக்கமான மதிநுட்பமான செயல்களை நன்கு கவனித்து வந்தேன்.

1994ல் இலண்டனில் ஸ்தாபித்த உலக சமாதானமன்றத்தில்அவரையும் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவராக இணைத்துக்கொண்டேன். தனது நண்பர் திரு. ஜெகதீசனை உறுப்பினராக்கினார். இருவரும் அன்றிலிருந்து இன்று வரையும் அதன் உறுப்பினராகவும், சமாதான மன்றப்பணிகளில் ஈடுபடுபவர்களாகவம் இருந்து வந்தனர். எல்லா இனத்தவர் மதத்தவர்களுடன் சேர்ந்து பணியாற்றும் மனோநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராவார். தன்னால் எவ்வாறு ஒரு சமூக அமைப்பில் பணியாற்ற முடியுமோ அவ்வாறு பணியாற்றப் பழகிக்கொண்டவர்.

அதனால் அவரைப் பல சமூக அமைப்புகளுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். நான் வால்த்தோம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்திலும் அதன் தமிழ்ப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய 1995 காலகட்டத்தில் அச்சங்கத்தில் தமிழ்ப்பாடசாலைக்கும் அறிமுகம் செய்து வைத்தேன். 1999ல் வோல்த்தாம்பொறஸட் தமிழ்ப்பாடசாலையின் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றி எல்லோராலும் பாராட்டைப்பெற்றார்.

அப்பாடசாலையில் கலைகற்று அரங்கேற்றம் செய்த பல மாணவர்களுக்கு வாழ்த்து மடல் பாடி வாழ்த்திய பெருமைக்குரியவர். சைவமுன்னேற்றச்சங்கத்திலும், நால்வர் பாடசாலை தமிழ் ஆசிரியராகவும் மறையும் வரை பணியாற்றியவர்.

கிழக்கு இலண்டனில் மிக வளர்ச்சியடைந்து வரும் நியூஹாம் தமிழர் ஐக்கிய சங்கத்தில் ஈடுபட்டு சமூகப்பணியாற்றி வந்தவர்.

பொறுப்பேற்ற பணிகளை பலன் எதுவும் பாராது கடமை உணர்வுடன் செய்து வருபவர் என அதன் தலைவர் திரு.புவனசுந்தரராசா பாராட்டியுள்ளார். இவ்வாறு பரந்த உள்ளம் படைத்தவரின் குடும்ப வாழ்க்கையில் பல தாக்கம் ஏற்பட்டது. இலங்கையில் வாழ்ந்து வந்த தனது மனைவியை இந்நாட்டுக்கு கொண்டு வர பெரும்பாடுபட்டார். பெரும் முயற்சி மேற்கொண்டு பெரும் செலவில் இந்நாட்டுக்கு வந்து சேர்ந்த அவரது மனைவியார் குறுகிய காலத்தினுள் நோய்வாய்ப்பட்டிருந்தார். மனைவிக்கு வந்த மாறாத நோயை மாற்றுவதற்கு இந்நாட்டு உயர்வைத்தியம் செய்தும் அந்நோயினால் மரணமுற்ற போது கவிஞர் திரு. நாகேந்திரன் ஆழ்ந்த துயரில் வாழ்ந்தார். அந்த இழப்பிலிருந்து மீள்வதற்கும் கவலையைத் திசை திருப்புவதற்கும் கவிதைத்துறையில் தீவிரமாக ஈடுபடும்படி ஆலோசனை கூறினேன். கவிதை அவர் வாழ்வில் கவலையை மாற்றியது. அதனால் அவர் மறையும் முன்னர் ஐந்து கவிதை நூல்களையும், நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு வாழ்த்துக்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுகளையும் ஆக்கியுள்ளார். இவைகளை அன்னாரது பெயரை கவிதை உலகில் நினைவுகூறும் ஆவணங்களாக நிலைத்து நிற்பவை.

அன்னார் இந்நாட்டுக்கு வந்து பல வருடங்களாக கவிதை உணர்வையும் அத்துறையிலுள்ள ஆற்றலையும் வெளிப்படுத்தாது இருந்து வந்தார்.

1995ம் ஆண்டு என்மீது கொண்டிருந்த அன்பினால் எனது பிறந்த நாளுக்கு ஒரு வாழ்த்துமடலைப்பாடிக்கொண்டு வந்து தந்தார். அதைப்பார்த்த போது அவரிடத்தில் காணப்படும் கவிதைத்திறனையும் உணர்வையும் அறிந்தேன். தொடர்ந்து கவிதைகள் ஆக்குங்கள் என்று உற்சாகம் கொடுத்தேன்.

சுடரொளி வெளியீட்டுகழகம் மூலம் வேண்டிய உதவிகள் நல்குவேன். ஆக்கும் கவிதைகளைப்பிரசுரிக்க வழிசெய்வேன் என்று கூறி உற்சாகம் கொடுத்து வந்தேன். ஆரம்பத்தில் எழுதிய கவிதைகளைப் பல ஊடகங்களில் வெளிவர வழி செய்தேன். அதன்பின் அவரைத் தேடிக் கவிதைகளைக் கேட்கத்தொடங்கினர். வானொலியில் சன்றைஸ் வானொலி இவரது பல கவிதைகளை ஒலிபரப்பியது. இவ்வாறு செய்த பெருமை ஒலிபரப்பாளர் நடாமோகனுக்குரியது. இவரது கவிதை வளர்ச்சிக்கு அவரும் அவரது சன்றைஸ் வானொலி நிலையமும் உதவியது. சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் நூல்வெளியீட்டு விழாக்களிலும் அதன் இலக்கியப்பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

சுடரொளி வெளியீட்டுக்கழகம் 2000ம் ஆண்டு நடாத்திய முதலாவது உலகத்தமிழ்க்கவிதைப்போட்டியின் அமைப்பாளர்களில் ஒருவராகவிருந்து அப்போட்டியைத் திறம்பட நடத்த உதவினார். அதனால் அன்னார்
திரு. நாகேந்திரன் அவர்களுக்கு உலகக் கவிஞர்களின் தொடர்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள பல கவிஞர்கள் இவருக்குப் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், மதுரை கவிஞர் ரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்கள் இவரது கவிதை நூலுக்கு முன்னுரை வழங்கிக் கௌரவித்துள்ளனர். அன்னாரது கவிதைத்திறனைப்பாராட்டி மாமதுரைக்கவிஞர் பேரவை "கவியருள்" பட்டம் ஒன்றை வழங்கிக் கௌரவித்தது.

கவிஞர் தெரிவு செய்து நெருக்கமாகிய நண்பர்களில் திரு. பொன்பாலசுந்தம் மிக முக்கியமானவர். இவரது கவிதைகள் வெளிவருவதற்கு முன்னர் திரு. பொன் பாலா அவர்களுக்கு அனுப்பி அவரது அங்கீகாரத்துவம் பெறுவது வழக்கமாக இருந்தது.

தனது அறிவியல்துறை ஆலோசகராக திரு. பொன்பாலா அவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெறுவார். இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது உலக இந்து மாநாட்டிற்கு திரு. பொன்பாலா உடனேயே சென்றிருந்தார். அவருடனே இந்தியாவும் சென்று வந்தார்.

அவர் எல்லோரையும் நம்ப மாட்டார். நம்பிக்கை பெற்றிருப்பவரை நன்றாக நேசிப்பார். நான் இலங்கையில் இந்து சமயவிவகார அமைச்சில் பணியாற்றிய காலத்தில் இலண்டனிலிருந்து எனது மனைவியின் சுகம் பற்றி வாரம் ஒரு நாளுக்கு சென்று விசாரிப்பார். எனது மனைவியாரின் குணாதிசயங்களை நன்கு மதிப்பவர்.

இதனால் போலும் இவ்வாண்டு அவரது பிறந்தநாள் விழா மனோர்பார்க்கிலுள்ள முதியோர் நிலையத்தினரால் கொண்டாடப்பட்டபோது பிறந்த நாள் வாழ்த்து பாடிக்கௌரவித்தார். தனதில் மனம் பதிந்தவர்களை உளமார நேசிப்பார். இத்தகைய உயரிய மனிதநேயம் கொண்ட கவிஞர். நாகேந்திரன் அவர்களின் இழப்பு இலண்டன் வாழ் தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா இறைவன் நிழலடி சேர பிரார்த்திப்போம்.

**I.T. சம்பந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஓலைகள் அஞ்சலி

கடந்த யூன் 5ம் திகதி திரு நாகேந்திரனின் அவர்கள் திடீர் மரணம் அடைந்த செய்தி கேட்டு நாங்கள் மிகவும் வேதனை அடைந்தோம். ஈழத்தில் உதித்து இங்கிலாந்தில் பல ஆண்டுகளுக்கு முன் குடிபெயர்ந்து சிறந்த தமிழ் தொண்டு ஆற்றியவர் கவியருவி நாகேந்திரன். இவரின் பல கவிதைகள் இங்கு பல தமிழ் வெளியீடுகளில் பிரசுரமானதை பலர் அறிவர். இவர் இதுவரை ஐந்து கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். அத்துடன் பல இலண்டன் தமிழ் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியராகவும் பல தமிழ் அமைப்புக்களில் சமூகப்பணியாளராகவும் சேவைசெய்து வந்தார்.

தமிழ் ஓலைகள் தொடங்கிய 1994ம் ஆண்டு முதல் திரு நாகேந்திரன் அவர்கள் எமது நிறுவனத்திற்கு பல வழிகளில் உதவிகள் புரிந்து அதன் வளர்ச்சிக்கு ஓர் உறுதுணையாக இருந்துவந்தார். தமிழ் ஓலைகளின் வெளியீடுகளுக்கு 1994ம் ஆண்டு முதல் ஓர் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் நாகேந்திரன் என்று சொல்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இவர் எங்கள் நிறுவனத்திற்கு ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவர். உதவி செய்வதென்றால் உள்ளன்போடு கரங்களை நீட்டி நிற்பார். இடதுகை செய்வதை வலதுகை அறியாதென்ற முறையில் பலபேருக்கு எதுவித எதிர்பார்ப்புமின்றி உதவிகள் புரிந்திருக்கின்றார். அவரின் மரணவீட்டில்தான் அவரின் எதிர்பாராத உதவிகள் ஒவ்வொருவரின் வாயினூடாகவும் வெளிவந்தது. அவர் எவ்வளவோ வருத்தங்களையும் பிறர் அறியாமல் தனக்குள்ளேயே மறைத்திருக்கின்றார். அவரின் உயர்ந்த குணங்களிற்கேற்ப ஆண்டவனும் அவரை ஒருவருக்கும் கடமைப்படாது அழைத்துவிட்டார்.

நாகேந்திரனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

திரு.தி.சிறீஸ்கந்தராஜா
திரு.ஆ.ஞானேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சிவதொண்டன் நிலையம் (UK)

**முன்னாள் தலைவர் மு. ஆறுமுகம் அவர்களின் இரங்கல் செய்தி**

எனது இனிய நண்பர் திரு. நாகேந்திரன் அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளேன். இவருடன் பழகியகாலங்களில் இவர் யோகசுவாமிகள் மீதும் பக்தியுடையவர் என்பதை அறிய வந்தேன்.

இவர் தனது சிறப்பு மிக்க கவிதைகளால் இலண்டன் வாழ் தமிழர்களுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். இவருடன் எனக்கு நேர்முகமான தொடர்பு ஏற்படும் முன்னரே இவரது கவிதைகளைப் படித்து இவர் மீது அதிமோகம் கொண்டிருந்தேன்..

இவர் என்னுடன் அடிக்கடி தொலைபேசி மூலம் உரையாடிக் கொள்வார். அவ்வப்போது விம்பிள்டனில் உள்ள எனது வசிப்பிடத்திற்கு வந்து என்னுடன் உரையாடுவதும் உண்டு. அவரது மறைவு எனக்கும் தனிப்பட்ட முறையில் இழப்பே.

எனது உடல்நலக்குறைவு காரணமாக இவரது இறுதிக்கிரியைகளின் போது நேர்முகமாகப் பங்கு கொள்ள இயலாமையை இட்டு மிகவும் மனவருத்தம் அடைகின்றேன். இந்த ஆத்மா நடராசப்பெருமானின் திருவடிகளில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கிறேன். ஓம் சக்தி "சக்தி! சுக்தி!".

மு. ஆறுமுகம்
முன்னாள் தலைவர் சிவதொண்டர் நிலையம் (UK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாவற்குழி கிராமத்துக்கு நற்பணியாற்றிய கவிஞர் நாகேந்திரன் தனது பெயர் சொல்ல வாரிசுகளாக கவிதைகளைத் தந்துள்ளார்.**

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பால்ய நண்பன் திரு. செல்லையா நாகேந்திரனை இழந்து விட்ட நிலையில், அந்த இழப்பின் துயரங்களையும் பிரிவையும் இதயத்தில் தக்க வைத்துக் கொண்டு அவரின் சேவைகளையம் மனிதநேய செயற்பாடுகளையும் திரும்பிப்பார்க்க விழைகின்றேன்.

இவர் நாவற்குழி என்னும் கிராமத்தில் பிறந்து ஆரம்பக்கல்வியை நாவற்குழி மகாவித்தியாலத்திலும் உயர்தரவகுப்பை யாழ்வைத்தீஸ்வரன் கல்லூரியிலும் பயின்று பட்டப்படிப்பினை கண்டிபேராதனைப் பல்கலைக்கழக்தில் முடித்து, இலங்கை நெற்சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் கடமையாற்றியவர்.

இவரது சமூகசேவை மனப்பான்மைகளும் மனிதநேயங்களும் இங்கு வந்து இவருக்கு ஏற்பட்டவைகள் அல்ல. எமது கிராமத்தில் மாணவனாக இரந்த காலத்திலேயே எமது கிராமவளர்ச்சியை முன்னெடுத்து செய்வதற்கான பணியை முன்னின்று நடாத்தியவர்.

எமது கிராமத்தில் ஓர் இனசமூகநிலையத்தை உருவாக்கி அதை அமைப்பதற்கு பொதுக்காணி உரி எல்லைக்குள் இல்லாதபோது தனது தாய் தந்தையரிடம் பேசி தங்களது சொந்த காணியையே அந்த நிலையம் அமைக்கத் தந்துதவிய தன்னலம் அற்ற பிறர்நலம் பேணிய பண்பாளன்.

எமது கிராமத்திலுள்ள இரண்டு கோவில்களுக்குப் பங்காளராக இருந்து சமய சம்பந்தமான நிகழ்வுகளையும் கலைநிகழ்ச்சிகளையம் காலாகாலம் செய்து கொள்ளவும், தொடர்ந்து இங்கு வந்ததன் பின்னரும் அக்கோவில்களைப் புரணமைப்பதற்கும் தேவைப்படும் நேரங்களில் பண உதவி செய்து கொண்டும் இருந்த உன்னத மனிதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்டில் மட்டும் இவர் கவிதைகளைப் பாடவில்லை. எமது கிராமத்தில் உள்ள சமூக நிலையங்களுக்கான கலை நிகழ்வுகளில் கலந்து கவிதைகள் பாடி பரிசிலும் பெற்றுக் கொண்டவர். இங்கு வந்து இவர் கவிதைகள் வளர்ந்து வடிவம் பெற்று புத்தகங்களாக வெளிவந்தன.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வினைப் பூரணப்படுத்தவே விரும்புகின்றான் முயலுகின்றான், இதில் வெற்றியும் தோல்வியம் இறைவனின் தீர்ப்பு. இந்த மனிதனை இறைவன் கடுமையாகவே சோதித்து விட்டான். வாழ வேண்டிய வயதில் இவரது மனைவியைப் பறித்துக்கொண்டான். பாதிவழியில் ஒற்றைச் சகோதரியை எடுத்துக்கொண்டான். இறுதியில் தனிமரமாக வாழ்ந்த இந்த மனிதனையும் அழைத்துக் கொண்டான். ஓட்டுமொத்தமாக வாழ்வை இழந்த நிலையிலே தனது காலத்தைக் கடத்தி கருவே இன்றி மறைந்து போனான்.

இனிமையான இவர் வாழ்வு இடையில் சிதறடிக்கட்ட பின் எஞ்சி இருந்தது அனுபவங்கள் மட்டுமே. இந்த அனுபவங்களையும், தன் உணர்ச்சிகளையம் உண்மைகளையும் வைத்து கவிதைகள் தொடுத்து தனது எஞ்சிய பகுதியைக் கழித்துக் கொள்ளும் வேளையில் மௌனமாகவே மரணத்தையும் ஏற்றுக்கொண்டு தனது பெயர் சொல்ல வாரிசுகளாக கவிதைகளை விட்டு விட்டு மறைந்து விட்டான்.

பண்பும் சேவையும் நேயமும் கொண்டிருந்த இந்த மனிதன் ஆத்மாவை அந்த இறைவன் அரவணைப்பை அருள வேண்டி கண்ணீருடன் விடைபெறுகிறேன்.

நாவற்குழி ஐ. கந்தசாமி B,.A. Ceylon



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் கல்லறையில்

தமிழ் மம் வீசும் யாழ் மண்ணாம் நாவற்குளியினிலே
கமழ் தமிழின் புகழ் கூறுவென்றே நாகேந்திரன் அவதரித்தார்
நிகழ் காலங்களின் நினைவேடுகளைக் கவிதைகளாய்
தவழ் என்ன விடும் வேளையிலே இரக்கமின்றி இறைவாநீ
எழுதும் கோலதனை ஏன் பறித்து எறிந்தனையோ!

உள்ளத்தினால் உயர்ந்து நின்றார்
உவுகையினால் உறவு சொன்னார்
உண்மைகளை மனதுள் வைத்து
ஊரெல்லாம் உலவி வந்தார்

சூழ்நிலைகள் அறிந்துதவும் கொடைவள்ளல் இவரென்றோ
தாழ்நிலைகள் பாாமல் வாழ்த்த வழி சமைத்திடுவர்
சாதி சமயமெல்லாம் ஒன்றெனவே கவி வடித்தார்
நீதி நெறிகளையே கருவாக்கி வாழ்ந்திட்டார்.

சான்றோர் முதியோர்கள் உலகத்துப் பெரியார்கள்
ஆன்றோர் என்றாலும் பண்போடு பழகிடுவார்
கற்றோர் கல்லாதோர் சிறியோர் பெரியோரோ
பற்றாய் எவரோடும் நயமாகப் பேசிடுவார்

நாடுவிட்டு வந்திடினும் நற்றமிழை வளர்க்கவென்றே
கூடு பொருள் தேடாது பாடுபல பட்டாரே
தேடி வரும் பொருளெதுவும் நிலைக்காது என்றுரைத்து
வாடி நிற்கும் மனிதற்கெல்லாம் மனமாய் இரந்தாரே.

சுபைக்குதவா மாக்களெல்லாம் சான்றெனவே முன்நிற்க
ஆவையத்துச் செயல்களெல்லாம் பின்னிருந்தே செய்திடுவார்
சுவையோடு பாடலென்று கவி வடித்துத் தந்திடுவார்
இவை தனதென்று கூறியங்கே பேரடுக்க விரும்பமாட்டார்.

முகம் மதியார் என்றாலும் அன்புடனே கரம் கொடுத்து
அகம் பாவம் கூடாது அது நமக்கு ஏனென்று
சுகம் இதுதான் வாழ்வினிலே சரியென்று சிலேடைகளை
மகத்தான கருத்தோடு நகைப்புடனே சொல்லிடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வரின் வாழ்க்கையிலே மேன்மைகள் பல உண்டாம்
சொல்லவரின் என்நாவின் வார்த்தைகளோ போதவில்லை அதை
நல்லவரின் நானிலத்தில் என்றும் மரிப்பதில்லை
கல்லதனிள் பதித்தாற்போல் என்றென்றும் வாழ்ந்திடுவார்

அன்றி வரின் சேவைகளை நினைவில் நிறுத்தினாலும்
இன்றி வரை நாமிழந்து கண்கலங்கி நிற்கின்றோம்
மென்ற கவி சிந்தனைகள் நெஞ்சை விட்டகலாது
என்றலும் எம் கவியின் ஆத்மா சாந்தி பெற்று
சென்று சொர்க்கம் சேர்ந்திடவே
நன்றாய் இருகண்மூடி சாந்தி சாந்தி என்று
ஒன்றாகப் பிரார்த்திப்போம்

சாந்தி சாந்தி சாந்தி
திருமதி அன்னலட்சுமி ஜெயபாபு (ஈஸ்ட்ஹாம், இலண்டன்)

## SAI ESTATES & LETTING
### நிறுவனத்தார் வழங்கிய அனுதாபச்செய்தி

கவிஞர் நாகேந்திரம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அவர் மிக நல்ல மனிதர். ஓர் அன்பான, பண்பான, அமைதியான, அவாஅற்ற அடக்கமான, அறிவுள்ள ஓர் நல்ல மனிதரை இழந்து விட்டோம்.

அவரின் தன்னலமற்ற உதவி செய்யும் பண்பும் யாரையும் குற்றம் கூறாத மனமும் என்றும் கவிஞரை எம்மத்தியில் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். இவர் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு மனிதராக வாழ்ந்து காட்டியவர். சிறந்த பண்புகள் நிறைந்த கவிஞர் நாகேந்திரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சுவர்ணா, கஜன்
Sai Estates & Letting



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டிலகப்பட்ட புழுவாய்த் துடிக்கிறோம்

பாதி வாழ்வில் பூதவுடல் பிரிந்ததுவும்
பாரினில் புகழைச் சேர்த்ததுவும்
கனவாய், கவிதையாய்ப் போனதுமே
எங்கள் உடலை, நிழலைக் காண - நாம்
உடல் உருகித் தேடுகின்றோம்.
ஆறுதல் சொல்ல ஆயிரம் பேர் இருந்தாலும் - உங்கள்
ஆருயிர் அன்புக்கு அது ஈடாகுமோ!

இத்தனை விரைவாய் எமைவிட்டுப் பிரிவீர் என
கனவிலும் நாம் நினைத்துப் பார்த்ததில்லை - ஐயா
அருகாமையில் இருந்து எமக்கு வழிகாட்டிய் கலங்கரை விளக்கே.
இன்று எரிமலை போல் குமுறும் எம் நெஞ்சத்தை யாரிடம் கூறி
நான் ஆறுதுல் கொள்வேன்?
வாரம் ஒருமுறை கூடியிருந்து எம்மை அரவணைத்து மகள்
ஜான்சிராணிக்குத் தமிழ் கல்வியூட்டிய தெய்வமே! இன்று
ஆறுதல் சொல்ல
நீங்கள் இன்றி ஏங்குகின்றோம் - ஐயா
எம்மை தவிக்க விட்டுச் சென்றதேனோ?
உங்கள் பிரிவு கேட்டு தூண்டிலகப்பட்ட
புழுவாய்த் துடித்திட்டோம்.

உங்கள் அன்பு முகத்தை எப்போது நாம் பார்ப்போம்?
பிறப்பவரெல்லாம் இறப்பது நிசம் என்று
ஆறுதல் கூறித் தேற்றுவோமாக!
ஐயா ! உன் திருப் பாதங்களில் மலர்தூவி
அஞ்சலி செய்கின்றோம் - இன்று
ஓம் சக்தி ! சாந்தி ! சாந்தி!!!

அம்பலம் - ஜெயந்தன்
தொழிலதிபர் (Fair & Bright)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் திரு. நாகேந்திரன் B.A. அவர்கள்

ஈழத்துத் தமிழ்க்குயிலே
எமதருமைத் தமிழ்மகனே!
தீதற்ற பெருங்குணமே
தீந்தமிழின் கவியருவி!
காலத்தால் நீசெய்த
கடமைக்கோ கணக்கில்லை!
வானத்துச் சுடரொளியாய்
வலம்வந்த காலத்தில்

தேனொத்த தமிழ் வளர
செய்திட்ட பணிமறவோம்!
மாசற்ற நின்பணியில்
மகிழ்ந்திருந்த நேரத்தில்
பேச்சற்றுப் போனாயோ
பேரிழப்பு தமிழருக்கு!
மூச்செல்லாம் தமிழ்மூச்சு
முடிந்ததுதான் போனதையோ!

நாகேந்திரன் நற்கவியே
சாவுக்கு மில்லையையா!
யாத்துவைத்த பாடல்களும்
எழுதிவைத்த பாடல்களும்
பாருள்ள அளவிற்கும்
பறைசாற்றும் நின்புகழை!
நாகேந்திரன் நண்பருக்கு
கண்ணீரின் அஞ்சலியே!

அன்பன் - பொன்னுச்சாமி - தூத்துக்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர். இரா. இரவி
(செயலர், மாமதுரைக் கவிஞர் பேரவை)
6. தாளமுத்துப் பிள்ளை சந்து.
இணையம்:www.kavimalar.com
வடக்குமாசி வீதி, மதுரை, தமிழ்நாடு.
மின்அஞ்சல்:era-eravi@yahoo.com

## சாவே உனக்கொரு சாவு வராதா?

மலரை விட மென்மையான உள்ளம் படைத்த கவிஞர். நாகேந்திரனின் உயிரைப் பறிக்க உனக்கு எப்படி மனம் வந்தது? புன்னகை மன்னன், எந்த உயிருக்கும் தீங்கு நினைக்காத நல்லவர், வல்லவர். இந்துவாகப் பிறந்தாலும் இயேசு பற்றி கவிதை வடித்த மத நல்லிணக்க இமயம். கவிதைகளைக் கண்டு வியந்த பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களிடம், நான் அணிந்துரை வாங்கி அனுப்பினேன். அதற்கு சன்மானமாக ரூ. 1000.'.- காசோலை அனுப்பினார்கள். ஆனால், பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களோ. அணிந்துரைக்கு பணம் வாங்குவதில்லை என்று மறுத்துவிட்டார்கள். உடன காசோலையை கவிஞர். நாகேந்திரன் அவர்களுக்குத் திருப்பி அனுப்பினேன். இந்த செயலுக்கு நன்றி செலுத்தும் விதமாக மணிமேகலை பிரசுரம் மூலம் அவர் வெளியிடும் நூல்களை எல்லாம் தவறாமல் 10 பிரதி எனது இல்ல முகவரிக்கு அனுப்பி வைப்பார்கள். உடன் நான் அந்த நூல்களை சிறந்த எழுத்தாளர்கள், விமர்சகர்களிடம் தந்து விமர்சன மடல் வாங்கி அனுப்பி வைப்பேன். பசுமையான நினைவுகள், பசுமரத்து ஆணி போல பதிந்து விட்ட நினைவுகள். மதுரை தென்றல் கவிதை இதழை கவிஞர் நாகேந்திரன் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அதில் பல கவிதைகள் தொடர்ந்து எழுதி பலரின் பாராட்டைப் பெற்ற மகன். இந்த உலகில் நான் மதிக்கும் சிறந்த மனிதர்களில் முதன்மையானவரான சிவயோகம் மலர் ஆசிரியர் பொன். புாலசுந்தரம் அவர்களின் நட்பு மலருவதற்கு முழுமுதற் காரணமானவர் கவிஞர். நாகேந்திரன் அவர்கள். என் உயிர் உள்ளவரை இந்த நன்றிக்காக அவரை மறக்க இயலாது.

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் உலக அளவில் "வருக தமிழர் பொற்காலம்" என்ற தலைப்பில் தீர்க்க தரிசனமாக நடத்திய கவிதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் பங்கு பெற்று பரிசும் பெற்றேன். அந்த போட்டிக்கு கவிதை அனுப்பியதிலிருந்து தான் கவிஞர். நாகேந்திரனின் நட்பு மலர்ந்தது. அவரது அறிமுகத்தால் அய்யா பொன். புாலசுந்தரம் அவர்களுடன் நட்பு வளர்ந்தது. திரு. நாகேந்திரன் சிறந்த கவிஞர் மட்டுமல், மிகச் சிறந்த மனிதர். திரு. சம்மந்தன் அவர்களின் புதல்வன் திருமண வாழ்த்து மடலை மிக அற்புதமாக வடிவமைத்து இருந்தார் கவிஞர். நாகேந்திரன். திரு. நாகேந்திரன் அவர்களின் உடல் மறைந்து இருக்கலாம். ஆனால் அவரது படைப்புகள் காலத்தால் அழியாதவை. புலம் பெயர்ந்த தமிழர்களிடையே தமிழ் மொழியுணர்வையும், இன உணர்வையும் வளர்த்த செம்மல். காசு பணம் மீது ஆசை வைக்காத உயர்ந்த உள்ளம். இலண்டன் வாழ் தமிழர்களை ஒருங்கிணைத்த ஒப்பற்ற மனிதர். கொடியவர்களை விட்டு விட்டு நல்ல மனிதரின் உயர்ந்த உயிரைப் பறித்த சாவே உனக்கு சாவு வராதா?

## MESSAGE OF CONDOLENCES AND APPRECIATION FROM WORLD PEACE ORGANISATION

Our members are shocked and deeply saddened by the sudden and untimely death of one of our founder members MR. SELLIAH NAGENDRAN who entered the God's Kingdom on 5th June 2004. He had been a tower of strength and contributed immensely to the growth of our organisation from its inception. He firmly believed that it is only through peace in the world, that human dignity and freedom, liberty, equal rights of every human being irrespective of race, colour, creed, religion etc. could be achieved. He worked tirelessly to achieve this. During his association with out organisation, we were able to observe a unique and remarkable quality in him in that he worked and moved freely with all sections of the community. We salute him for his service to the humanity. His body may destroyed but his soul will remain with us forever and ever and guide us through out. We pray that his soul may rest in peace.

Charles Omorodin
CHAIRMAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN APPRECIATION AND IN MEMORY OF THE LATE MR SELLIAH NAGENDRAN, B.A. (A GREAT TAMIL POET)

It is with profound sadness, we the members of the World Peace Organisation, record the sudden passing away of MR SELLIAH NAGENDRAN, a founder member. He entered God's Kingdom on 5th June 2004, a day after his 58th Birthday. Mr Nagendra had been a tower of strength and contributed immensely in numerous ways to the growth of our organisation from its inception i.e. since October 1991. Over 12 years of invaluable service. He participated in all the activities with great dedication and full commitment. He firmly believed that it is only through peace and peace alone spread all over the world, that human dignity, freedom, liberty, equal rights of every human being; irrespective of race, colour, creed, religious etc, could become a reality. He worked tirelessly towards achieving this.

During his association with our organisation which consist of members from different walks of life, discipline, nationalities; we were able to observe a unique and remarkable quality in him. He worked, mixed together and moved very closely with all sections of the community. He was held in high esteem. We salute him for the service to the humanity. He was a great Tamil Poet. He has to his credit several publications. A legacy, he proudly left behind, for the benefit of the Tamil Community. He was also involved with and gave his time on a voluntary basis, to many other community organisations. He will be sadly missed by all of them but fondly remembered.

Let me conclude by saying that;

"He who is hidden who has entered into the cave of the hearts of hearts can not be seen with external eyes. He is seen with the eyes of the soul. Without beginning without end, he is not destroyed when the body is destroyed. He will live with us for ever and ever"

May I, on behalf of the members of the World Peace Organisation, offer our deepest sympathies to his near and dear. We pray that his soul rest in peace.

OM SHANTHI OM SHANTHI OM SHANTHI

***C. SITHAMPARAPILLAI***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் காணிக்கை

எங்கள் அமைப்பாம் நியூஹாம் ஐக்கிய தமிழர் அமைப்பில் தம்மையும் ஒருவராக இணைத்து உதவிப்பொருளாளராகவும், செயலாளராகவும் அமர்ந்திருந்து அண்டி வந்த தமிழர் தமக்கெல்லாம் உதவிகளை ஊக்கமுடன் உவந்தளித்த சேவைகளை எண்ணி நாமெல்லாம் வியக்கின்றோம். பயன் பெற்றவர்கள் தம் இதயபூர்வமான நன்றிகளைக் கண்ணீரால் காணிக்கை தருகிறார்கள்.

நாகேந்திராவின் நாவிலே கலைவாணி நர்த்தனம் ஆடி நின்றாள். இதன் காரணமாக இவரின் கவிதை மழையில் நனைந்தவர்கள் ஏராளம். ஆண்டவனின் புகழ் பற்றி இவர் பாடிய கவிதைகள் ஏராளம். காராண்ட மழை போல் கண்கள் குளமாகும் இவர் கவினுற்று கவிதைகள் படித்திடுங்கால்.

கற்றார் மத்தியிலே தனக்கோர் இடம்பிடித்திருந்த திரு. நாகேந்திரம் அவர்கள் கனிந்த வார்த்தைகள் தான் பேசுவார். பிறருக்கு ஒடிவந்து உதவும் பண்பு அவரிடம் இருந்தது. ஓய்வு நேரத்தில் ஓடிவந்து எங்கள் அமைப்பிற்கு ஆற்ற வேண்டிய சேவைகளை சிறப்புற ஆற்றி நின்று எமது அமைப்பு ஆலவிருட்சமாக வளர ஒத்துழைத்த செம்மல் நாகேந்திரம் அவர்கள் இன்று எம்மையெல்லாம் கண்ணீர மழையில் நனைய விட்டு எல்லாம் வல்ல இறையின் அடியில் அடைக்கலம் புகுந்து விட்டார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம் -திரு. புவனசுந்தரராஜா
தலைவர் நியூஹாம் ஐக்கிய தமிழர் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமஸ்ரீ சமூகத்திலகம், நாவற்குழியூர்
திரு. வைரமுத்து-நடராசா. J.P
(அகில. இலங்கைக்குமான சமாதானநீதிவான்)

No: 14 WINSTON WALK
ACTON GREEN, CHISWICK
LONDON, W4 5SW
UNITED KINGDOM
Tel: 020 8994 7833

**SAMASRI SAMOOGA THILAGAM, NAVATKULIYOOR,**
**MR. VAIRAMUTHU-NADARAJAH. J.P**
**(JUSTICE OF THE PEACE, WHOLE ISLAND, SRILANKA)**

கவிஞர் திரு. செல்லையா நாகேந்திரன் B.A அவர்களுக்கு நினைவு அஞ்சலி

யாழ் மாவட்டத்திலுள்ள நாவற்குழி-கிழக்கு தெருவுப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திரு. செல்லையா நாகேந்திரன் அவர்கள் வறுமைக் கோட்டுக்குள் வாழ்ந்த குடும்பத்தில் ஒரே ரு மகனாகா 04-06-1946ம் ஆண்டு பிறந்தார். இவருக்கு ஒரேஒரு தங்கை. இவர் தனது ஆரம்ப கல்வியை யாழ் .'.நாவற்குழி மகாவித்தியாசாலையில் கல்வி பயின்றார். பொருளாதார கஷ்ட்டத்தின் மத்தியிலும் இவருடைய பெற்றோர் இவரை யாழ் .'.வைத்தீஸ்வராகல்லூரியில் சேர்த்து படிக்க வைத்தார்கள் பல கஷ்ட்டங்களுக்கு மத்தியிலும் படித்து டீ.யு பட்டம் பெற்றார். அரசாங்க பதவியையும் பெற்றார். வேலையின் நிமிர்த்தம் மட்டகிழப்புக்குச் சென்றார். அங்கேயே தன் வாழ்க்கை துணைவியையும் தேடிக்கொண்டார்.

இலங்கையின் போர் சூழ் நிலை காரணமாக தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த போது இவரும் தன் மனைவியுடன் பிரித்தானியாவில் குடியேறினார். நோய் காரணமாய் அன்புத் துனைவியார் மரணமானார். ஒரு வருடத்தின் பின் தனிமையில் அவர் படும் துன்பங்களையும், கஷ்ட்டங்களையும நேரில் கண்ட யானும் இன்னும் சில நண்பர்களும் இவருக்கு ஆறுதல் கூறினோம். தனது மனைவியின் ஆத்மசாந்திக்காகவும், தனது ஆன்மீக ஈடேற்றத்துக்காகவும் அயராது பாடுபட்டார். பல சமூகத்தொண்டுகள் புரிந்தார், கற்பித்தார், கவிதை எழுதினார், புத்தகம் வெளியிடுதல் போன்றவற்றில் ஈடுபட்டார்.

உலகில் பிறப்பவர்கள் எல்லோரும் புகழோடும் பெருமையோடும் பிறந்துவிடுவதில்லை. ஒரு சிலர் தான் பிறந்த நாட்டிற்கும், தான் வாழும் நாட்டிற்கும், சமூகத்திற்க்கும் தம்மை அர்ப்பணித்து வாழ்பவர்களாக விளங்குகிறார்கள். இவ்வகையில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரில் கவிஞர் செல்லையா நாகேந்திரன் ஒருவராவர். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவரின் குறளுக்கிணங்க வாழ்ந்து காட்டியவர் அமரர் நாகேந்திரன். அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி வணக்கம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூட்டிங் முத்துமாரி அம்பாள்

விளம்பவே முடியாத மதியுகம் படைபலத்தால்
வையத்தைத் தனதாக்கி வெற்றியுடன் ஆண்ட
வளம் பெரும் சீமைநாட்டின் மன்னு புகழ்
வண்ணமிக தென் மேற்கு இலண்டனிலே
களம் பல கண்ட தமிழினம் புலம் பெயர்ந்து
கன்னித்தமிழ் வளர்க்கும் ரூட்டிங் மாநகரில்
உளம் மிகு நல்லயார் உணர்வோடுதுதிக்க
உலகாளும் இலண்டன் முத்துமாரியம்மா

ஆதியந்தமற்ற சோதிவடிவானவளாய்
அலங்கார எழிலுருவாய் ஆடுங்கலையுருவாய்
சாதி சமயமற்று இன இட பேதமற்றுச்
சீருஞ்சிறப்போடும் சுதந்திரமாய்க் கற்று
சேதிகளை நாள்முழுதும் உடனுடனே ஒலிஒளியில்
செந்தமிழில் கேட்கவைத்தும் பார்க்கவைத்தும்
நாதியற்று வந்தோரைப் பீதியற்று வாழவைக்கும்
நாமகளே இலண்டன் முத்துமாரியம்மா

உத்தம அடியாரை உலகமெங்கும் வாழவைத்து
ஊக்கமுடன தமிழினத்தைத் திகழவைத்து
வித்தகரின் வாழ்வுகளை ஓங்க வைத்து
வர்த்தகரைத் தினமும் உயர வைத்து
முத்தமிழை முறையோடு பயில வைத்து
முக்கனியும் வரவழைத்துப் பகிர்ந்தளித்து
சித்தமுடன் கல்விகலை வளர்த்து வரும்
சிங்காரியே இலண்டன் முத்துமாரியம்மா

அலைபாயும் அன்புருவே ஆனந்த நாயகியே
அற்புதங்கள் ஆதிமுதல் ஆற்றும் பூமகளே
குலையாய்ப் பத்தியுடன் கும்பிடு மடியார்க்குக்
குவலயத்துச் செல்வமனைத்து மீந்து
மலைமகளாய் கலைமகளாய் மாணிக்க மாமணியாய்
மக்களின் அகக்குறை அகற்ற வல்லதாயே
நிலைதளரா ஆட்சியில் நித்தியக்கோவில் கொண்ட
நெடுந்தகையே இலண்டன் முத்துமாரியம்மா

வேப்பிலை விபூதி குங்குமத்தால் அடியாரின்
வெப்பநோய் வேதனைகள் அகற்றி
ஆப்பிள் திராட்சை பயிர்வகைச் சுவைப் பழங்கள்
ஆனவரை பழுத்துச் சொரியும் திருநாட்டில்
தோப்பனைய சாடிகளில் நிறைந்துள்ள மாடிகளில்
துலங்கும் பூமரங்கள் செழித்துப் பூச்சு
மூப்பரும் இளையோரும் தொண்டாற்ற வீற்றிருக்கும்
மங்களநாயகியே இலண்டன் முத்துமாரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஈஸ்ட்ஹாம் ஸ்ரீமுருகன்

திருமகளும் கலைமகளும் உறவாடும் சீமையில்
விருப்புடனே வந்து வள்ளி தெய்வயானையுடன்
பெருவளத்து நியூஹாமில் பதிகொண்டு தேரில்
அருள் சுரக்க அமர்ந்துவரும் பெருமானே!

ஆதிசிவன் நுதலில் உருவெடுத்துத் தேவர்
பீதிய சுற்றப் போருமிட்டு வென்று சைவ
நீதியுணர்ந்தப் பதிகொண்டு லண்டன் மாநகர
வீதியில் வளர்ந்து வரும் நாயகனே!

வாலைப் பருவத்து வீரத்தழகோடுமனோப்பார்க்கில்
வேலைத் தாங்கிய வெற்றிப் பெருமகனாய்
மாலை வனப்போடும் மங்கள ஒலியோடும்
காலைப் பொழுதில் வலம் வரும் வேலவனே!

செல்வக் களஞ்சியமாய்ச் சீர்மேவு மிந்நாட்டில்
சொல்லற்கரியதோர் அற்புதப் பேரூற்றாய்
அல்லல் அறுத்து அனைவரையும் காத்து
நல்லருள் பாலிக்க உலாவரும் தனையனே!

விந்தைக்கு விளையாட்டாய் ஔவைக்குப் பழிமீந்து
சுந்தரத் தமிழாற் சிறந்த நூல் இயற்ற வைத்து
சிந்தைக்கு விருந்தளிக்கும் கணணியுகக் கருநாட்டில்
தந்தைக்கு முன் வந்து விழாப் பெற்ற குமரனே!

தேரிழுத்து உனைப் புகழ்ந்த தமிழீழ மண்ணெங்கும்
நேரிட்ட அன்னலை நீற்றுத் தகர்த் தெறிந்து
பாரிலோர் தமழராட்சி மலரவைப்பாய் நீதிக்காய்ப்
போரிட்ட தெய்வமே லண்டன் ஸ்ரீமுருகா நீயே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ முன்னேற்றச்சங்கம் வாழியவே

-செ. நாகேந்திரன்-

வாழிய சைவம் வாழிய சைவம் வையகம் போற்றிடவே
வாழிய சைவ நீதியும் மக்களும் வான்புகழ் ஓங்கிடவே
வாழிய சைவ முன்னேற்றச்சங்கம் சீமையில் பல்லாண்டே
வளம் பலபெற்றும் புகழ்பல பெற்றும் வாழிய வாழியவே
சைவம் போற்றும் சந்நிதி யெல்லாம் சங்க தமிழ் காத்தே
சிலமறையோதித் திருமுறைபாடி வாழிய வாழியவே
நால்வரின் பெயரால் நற்பணிபுரியும் நால்வர் கலைக்கூடம்
நலம் புகழ் பெற்றே நானிலம் மெச்ச வாழிய வாழியவே
உலகமெங்கும் சைவ அறிவை உணர்த்தி வளர்த்துவரும்
கலச இதழும் கதிரினைப் பெருகி வாழிய வாழியவே
அலையாய் அன்பு வளர்ந்திடவே அறமும் அறிவும் ஓங்கிடவே
கலையும் பண்பும் காக்கும் அங்கம் வாழிய வாழியவே
பாரம்பரியம் பேணவைத்தே பாரில் தமிழர் பெருமை பெற்று
சேருந்நாட்டிற் சிறப்பைப் பொழியும் செந்தமிழ்ச் சங்கம் வாழியவே
மேல்நாடெங்கும் அறுகாய்ப் படரும் மூத்த அருஞ்சைவம்
ஆல்போல வளர்ந்து மலைபோல் நிலைத்து வாழிய வாழியவே
சங்கம் புரியும் பொதுப் பணியாவும் பெருமை கீர்த்திபெற்று
சிவவழிபாடும் சத்திய வாழ்வும் சிறப்புடன் வாழியவே
எங்கும் எதிலும் சைவம் ஓங்கத் தமிழும் வாழியவே
எங்கும் எதிலும் சைவம் ஓங்கத் துலங்குக வையகமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூாசியம் சிவன் கோவில் முன்னாள் தலைவர் டாகடர் எஸ்.நவரத்தினம் அவர்களின் அனுதாபச் செய்தி**

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கவிஞர் நாகேந்திரன் அவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்தேன்.
அவரிடத்தில காணப்பட்ட புலமை, எழுத்தாற்றல், சிறந்த குணாதியங்கள் போற்றத்தக்கன. மிக அடக்கமான ஒரு அறிவுப் பொக்கிசமாக விளங்கினார்.
மிகக் குறுகிய காலத்தில் சிறந்த கவிதைகளை ஆக்கும் ஆற்றல் அவரிடத்தில் காணப்பட்டது. அவர் மூலம் சில கவிதை-களை ஆக்குவித்தேன். அதனால் அவரின் திறமையைப் புரிந்து கொண்டேன். தொலைபேசியில் விடயங்களைச் சுருக்கமாக கூறுவேன். குறிப்பெடுத்து மறுநாளே கவிதைகளை ஆக்கித்தரும் ஆற்றல் அவரிடம் இருந்தது. உதாரணத்திற்கு-
கலைமேதை வீரமணி ஐயரின் மறைவையொட்டி ஒரு கவிதை ஆக்கித்தருமாறு கேட்டிருந்தேன். அவர் 12 மணித்தியாலத்திற்குள் ஆக்கித்தந்த கவிதையின் சில பகுதிகளை இஙகு தருகிறேன்.
வித்தகர்க்கு வித்தகராம் வீரமணிஐயர்
வீரமுள்ள யாழ்ப்பாணத்தில் பிறநதார் அந்த ஐயர்

கலைஞனாகப புலவராக சங்கீத ஞானியாக
தலைசிறந்த பாடல்களை தந்தார் இந்த ஐயர்

எந்தப் பிரதிபலனும் கருதாது கவிதை உணர்வுடன் கவிதை-களைப் படைத்து வந்தார். அவருடைய பாடல்களில் தெய்வீகத்தன்மை ஆத்மீக எழுச்சி மிகுந்து காணப்படும்.லூாசியம் சிவன் கோவில் பற்றி பாடக்கேட்டபோது பக்தி ததும்ப அவற்றைப் படைத்தார். இவரது கவிதைகளில் தாயகத் தமிழர்கள் அகதிகள் பற்றிய பிரச்சனைகள் பிரதிபலிக்கும். பிறர் பிள்ளைகளைத் தன்பிள்ளைகள் போல்போற்றி தமிழ்க்கல்வி ஊட்டி வந்தார். கவிஞர் நாகேந்திரன் அவர்களின இழப்பு அனைவருக்கும் பேரிழப்பு. அன்னார் இறைவனடியில் அமைதி வாழ்வுபெற பிரார்த்திப்போமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tilko(Holidays) உரிமையாளர்
# திரு த. திலகராசா அவர்களின்
# அனுதாபச் செய்தி

கவிதையால் பலர் உள்ளங்களைக் கவர்ந்த கவிஞர் செ.நாகேந்திரன் அவர்களின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியை அளித்தது.தமிழ்ப்பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டுவதில் மிக ஆர்வம் கொண்டவராக காணப்பட்ட இவர் எனது பிள்ளைகளுக்கு வாரந்தோறும் தமிழ்க்கல்வியைப் புகட்டி வந்தவர்.

தமிழோடு பல தமிழ் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை, பல வியத்தகு கருத்துக்களை தமக்கேற்ற பாணியில் நகைச்சுவை ததும்ப பிள்ளைகளின் அறிவு அனுபவத்திற்கேற்ப கூறுவார். வழமைபோல் கல்வியூட்ட வரவேண்டியவர் அன்று வரவில்லை. அன்றே காலன் அவரை அழைத்துச் சென்று விட்டான்.

மிக அன்பான குணம் படைத்த திரு நாகேந்திரன் பிள்ளைகளை அன்பாக, அரவணைத்து நடப்பவர்.
அந்த நல்ல உள்ளத்தை இழந்து நானும் எனது குடும்பமும் வேதனையடைகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோல்தம் பொறஸ்ட் தமிழ்ப் பாடசாலை

## பைந்தமிழ் வளர்த்தவனே! அண்ணா நாகேந்திரா!

நாவற்குழியூர் தந்த நல்லெழில் குணத்தவனே!
பாவால் லண்டனில் பைந்தமிழ் வளர்த்தவனே!

நாம் இங்கு தவித்திருக்க, என்றென்றும் நினைத்திருக்க
கண்ணற்ற காலன் உனைக் காவுகொண்டு போனதேனோ?

ஆன்மீகம் உன்கவியில் எப்போதும் மிளிர்ந்தபடி
அன்புதான் வோல்தம்தமிழ்ச் சிறார்களில் நீ பகிர்ந்தமொழி

ஆன்மீகம் அன்பு என்பவற்றை வளர்த்தபடி - உனக்கு
அரசியல் சொல்லாடல் எப்போதும் அத்துபடி

சமபந்தி போசனத்தில் அரச கனம் கண்டவனே
சமத்துவம் அதில் இல்லை என சந்திக்கு சொன்னவனே

வடகிழக்கு மலையகம் ஒன்றித்த நிலையொன்றே
சமவழி காண இங்கு தனிவழி என்றவனே

உன்னோடு உரையாடிய மணித்துளிகள் சிலவற்றில்
எண்ணற்ற கருத்துக்கள் ஏராளம் ஏராளம்

அண்ணா நாகேந்திரா, ஆண்டவன் அடிகள் தன்னில்
பொன்னாக நிலைத்திருக்க வேண்டுகின்றோம் -போற்றுகின்றோம்

ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பில்
திருமதி மனோ நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம்

## மறைந்த உயர்திரு நாகேந்திரன் அவர்களுக்கு

## கண்ணீர் அஞ்சலி

அன்புக்கும் பண்புக்கு உறைவிடமாய்த்
திகழ்ந்த எம் ஆசிரியப் பெருந்தகையே!
அடக்கமும் அமைதியும் அருந்துணையாய்க் கொண்டு
அரும்பிய புன்னகையும் அளவான பேச்சும்
தன்னுடையதாக்கி தரணி போற் வாழ்ந்த
எம் அரிய நண்பனே! இனிய ஆசானே!
போற்றரிய தாய்மொழிப் பற்றும்
தமிழ்த்தாயகம் மேற் தாம் கொண்ட தாகமும்
தமிழன்பர் உள்ளத்தில் என்றும் நிலைநிற்கும்
உன் கவிதைத் திறனுக்கோ உலகினில் நிகரில்லை
எண்ணரிய பொருளையெல்லாம் எண்ணியவாறு ஆங்கே
எழிலான கவிதைகளில் இயல்பாக வடித்தெடுத்தாய்
தமிழ்க்கவிதை உலகினிலே தனிப்பெரும் ஒளியானாய்
வோல்தம்ஸ்ரோ தமிழ்ச்சங்கம் இணைத்திட்ட தமிழ்க்கூடம்
தங்கள் அரும் சேவையினால் தழைத்து வளர்ந்தமையை
என்றும் மறக்காது, என்றும் மறக்காது
பள்ளிச்சிறார் மத்தியிலே ஆசானாய் மட்டுமன்றி
பண்புடைய நண்பனாயும் பழகுகின்ற மனப்பாங்கு
உயர்ந்த உங்கள் வாழ்க்கை நெறி
உலகினர்க்கு எடுத்துக் காட்டு
தமிழ் அன்பர் வாழ்வினிலே தடம் பதித்துச் சென்றீர்கள்
தங்கள் மறைவு கேட்டு வருந்திக் கலங்குகின்றோம்
ஆன்ம சாந்தி வேண்டுகின்றோம்
அருள்மிகு இறைவன் அவன் இனிய சாந்தி அளிப்பாராக

இங்ஙனம்

**வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம்**
தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும்

ஆக்கம்
திருமதி தே.சிவகுணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பென நின்ற தோற்றம்
# கரும்பெனப் பேசும் ஆற்றல்

அமைதிவழிகொண்டு ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி
உணர்வைக் கவியாக்கும் உத்தமனை நாம் இழந்தோம்.
பகலவன் கண்மூடி, பனிபடர்ந்த நிலவொளியில்
புரியாத உணர்வுகளை கவிவழியாய் வெளிக்கொணர்ந்தாய்
பிறந்ததினம், மணவிழா, அரங்கேற்றம் என்றுபல
வாழ்த்திதழ்கள் கவிவடிவாய் வரிகோர்த்து நீசமைத்தாய்
செந்தமிழைப் பள்ளியிலே சிரத்தையுடன் கற்பித்து
எந்தமிழும் சீமையிலே உயிர்வாழ வழிகொடுத்தாய்
புலம்பெயர்ந்த மக்களது விண்ணப்பப் படிவங்கள்
விலையேதுமின்றி விருப்புடன் நிரப்பி நின்றாய்
கருமைநிறத்தோற்றத்தில் வெண்மைநிற உள்ளமானாய்
உயர்ந்த உன்னுள்ளத்தை உருவத்தில் காட்டி நின்றாய்
ஈசனையும் நீபாடி எம்மதமும் சம்மதமாய்
இயேசுவையும் பாடி இறைவனவன் ஒன்றென்றாய்
நகைச்சுவையாய்ப் பேசி நறுக்கிடவே நன்னெறியை
வகையோடு தந்துநின்ற வள்ளலைநாம் இன்றிழந்தோம்
இரும்பென நின்ற தோற்றம் கரும்பெனப் பேசும் ஆற்றல்
விரும்பிய வேளையெல்லாம் விருப்பொடு உதவும் உள்ளம்
நெருங்கிய நண்பர் நெஞ்சில் நிலையென நிற்கும் தோழன்
நெருப்பிடை வேகும் காலம் நொடிதனில் வந்ததய்யோ
சொந்தமில்மக்களெல்லாம் சொந்தமாய் உன்னையெண்ண
வந்தவர் வாழஇங்கு வகைபல செய்து வைத்து
நிந்தனை செய்தவர்க்கும் - அவர் வெட்கிட நன்மைசெய்து
செந்தணல்மீது பற்றி சேர்ந்தனை சொர்க்கலோகம்
உன் ஆத்மா சாந்திபெற ஈசனைநாம் வேண்டுகின்றோம்!

கவிஞர் பாலரவி
ஆசிரியர் - தென்றல் பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பா நாகேந்திரா!

நல்லவன் நீ!
நட்பின் இலக்கணம் நீ!
கண்ணின் இரு மணியாக தமிழ் வளர்த்தாய்!
கவி படித்தாய்!
அன்பின் மறு உருவாக
அனைவருக்கும் உதவி நின்றாய்
தொண்டனாக பணி புரிந்தாய்
வண் தமிழில் நீ நனைந்தாய்
மண்ணுலகில் கவி பாடி
மாந்தர் எமை மகிழ வைத்தாய்
விண்ணுலகில் கவி பாட
விழைந்து நீயும் விரைந்தனையோ!

பொன்மகனே!
பூவாரம் சூட்டி வழியனுப்புகின்றோம்!
எம் அகத்தில் உறைந்தவனே!
விண்ணகத்தில் நீ துயில்வாய்!

பாலகுமார் தம்பதிகள்
மனோபார்க்
இலண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Waltham Forest Thamil Sangam
வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம்

# சிறந்த பண்பாளர்

கவிஞர் செ.நாகேந்திரன் அவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அமைதியான வழியில் அளப்பிலா சேவையாற்றும் ஓர் உண்மைத் தொண்டனை நாம் இழந்து தவிக்கின்றோம். எமது தமிழ்ச்சங்கத்தில் இணைந்து அவர் பல வழிகளில் சங்கம் முன்னேறப் பாடு பட்டுள்ளார். கலைவிழாக் காலங்களில் மாணவர்கள் தத்தம் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கப் பெரிதும் உதவியுள்ளார்.

இந்நாட்டில் தஞ்சமடைந்து உதவிகள் கேட்டு வரும் எமது மக்களுக்கு அன்போடும் ஆதரவோடும் உதவிகள் செய்துள்ளார். அவர்களுடன் தானும் அந்தந்த அலுவலகங்களுக்குச் சென்று அவர்களது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். இதற்காக அவர் எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் நகைச்சுவை ததும்பிய அதே வேளை ஆழமான கருத்துக்கள் பொதிந்த உரையாடல் கேட்பதற்கு மனத்திற்கு ஆறுதல் அளிப்பதும் சிந்திக்க வைப்பதுமாகும். அன்னாரது இழப்பு புலம் பெயர் வாழ் தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாதது. வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் சார்பிலும், பாடசாலையின் சார்பிலும் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைவதாக.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

க.குகச்சந்திரன்
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் கூறுகின்றோம்

கவிஞர் செ.நாகேந்திரன் அவர்களது

சிவபதச்செய்தி அறிந்து

அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும்,

அன்னாரது இறுதிக்கிரியைகளில்

பங்கு கொண்டவர்களுக்கும்,

இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும்,

நினைவு மலருக்கு

செய்தி அனுப்பியவர்களுக்கும்

அன்னாரது குடும்பத்தின் சார்பில்

நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
சண்முகத் தெய்வமணியே !

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞரின் கவிதைப் பூக்கள்














வெளியீடு:

சுடரொளி வெளியீட்டுக் கழகம்

15 Rutland Road
London E7 8PQ
Tel: 020 8552 6992

Printed by JR Print Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org